A. M. D. G.

# பீடத்துப் பரிசாரகர்

எனும்

# அர்ச் பெர்க்மான்ஸ்

# அருளப்பர் சபை.

---

SS. Heart's Cathedral

TUTICORIN.

1924.

Imprimatur,

✠ F. T. Roche, S. J.

Episcopus, Tuticorinensis

# பொருள் அடக்கம்.

---

## முதற்பாகம்.

சபை ஒழுங்குகள்.

---

## இரண்டாம் பாகம்.

பூசைக்கு உதவிசெய்யவேண்டிய வகை.

---

# அர்ச். பெர்க்மான்ஸ் சபை.

## முதற்பாகம்.

## முன்னுரை.

பக்திக்குரிய இச்சபை சிலாவோனியா நாட்டில் வேதம் போதித்து வந்த சங்: வின்சேன்ற் பாஸ்தில் சுவாமியவர்களால் 1865ம்-௵த்தில் ஏற்படுத்தப்பட்டது. பீடத்தில் உதவிசெய்கிறவர்கள் தங்களுக்குக் கிடைத்த இம்மகத்தான அலுவலைத் தகுந்த பக்தி பற்றுதலுடன் செய்யவேணும் என்பதே இச்சபையின் நோக்கமாகும். பக்திக்கும் அடக்க ஒடுக்கத்துக்கும் உத்தம மாதிரிகையாக விளங்கும் வாலிப அர்ச்சியசிஷ்டவரான சேசுசபை அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் இந்த சிறு சபைக்குப் பாதுகாவலராய் இருக்கிறார்.

ஒன்பதாம் பத்திநாதரென்னும் பாப்பானவர் இதை அங்கீகரித்து ஆசீர்வதித்து இதற்கு அநேக ஞான நன்மைகளை அளித்திருக்கிறார்.

இக்காலத்து சிறுவர்களிடத்தில் விசுவாசத்தையும் பக்தியையும் வெகு கரிசனையுடன் பாதுகாத்து வருவது மிகவும் அவசரம். அவர்கள் சிறுவராயிருக்கும்போதே, இப் புண்ணியங்களைப் பாதுகாப்பதற்குத் தகுந்தவழி வகைகளைக் கையாடத் தவறினால், அவர்கள் பிராயம் அடைந்தபின் பயபக்தியுள்ள கத்தோலிக்காயிருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. நமது பங்கிலுள்ள சிறுவர் பீடத்தில் பக்திபற்றுதலுடன் ஊழியஞ்செய்து தேவ ஆராதனை சடங்கு முறைகள் நமது தேவாலயத்தில் தகுந்த மேரையாய்நடந்தேறுவதற்கு இச்சிறுவர்களுடைய நடச்சை ஒத்ததாயிருக்கவும், மெய்யான கத்தோலிக்க விசுவாசத்தின் விதை அவர்கள் உள்ளத்தில் முளைத்துச் செழிப்பாய் வளருவதற்கும் இந்தச் சிறு சபை வெகு பிரயோசனமாயிருக்கும் என்று நம்புகிறோம்.

# சபை ஆளுகை.

இந்த சபை மேற்றிராசனக் கோவில் பங்கு சுவாமியாராலும் (அல்லது அவரால்நியமிக்கப்பட்ட வேறொரு குருவானவராலும்) சபையாரினின்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவனாலும் நடத்தப் படும்.

சபையை நடத்துகிற குருவானவர் சபையின் மாதாந்தரக் கூட்டத்தில் அதாவது மாதத்தின்முதல் புதன்கிழமையன்று காலை 9-மணிக்கு நடைபெறு ங்கூட்டத்தில் சபையாருக்குப் புத்தி பிரசங்கம் சொல்வார். அவரே சபையாரின் ஆத்தும குருவு மாயிருப்பார்.

தலைவன். சபைப்பொது விசாரணை இவனைச் சார்ந்தது. வாரம் ஒருமுறை கூடும் கூட்டத்துக்கு இவனே தலைமை வகித்து, பூசைக்கு உதவி செய் கிற முறையையும் மற்ற சடங்கு முறைகளையும் சபையார் தகுந்த விதமாய் அறிந்திருக்கிறார்களா வென்று அவர்களைப்பரீட்சித்துப்பார்க்கக்கடவான்.

பூசைக்கு உதவிசெய்யும்போதும் மற்ற சடங்குகளுக்கு உதவி செய்யும்போதும் சபையார் சரியாய்த் தங்கள் கடமைகளைச் செய்கிறார்களாவென்று இவன்கவனிக்கவேண்டும். இவனுக்குரியஇக்கடமையைத் தக்கபிரகாரம் நிறைவேற்றுவதற்காக அடிக்கடி சபையை நடத்துகிற குருவானவரிடம் போய் சபையின் தற்காலநிலைமையைப்பற்றிக் கலந்து பேசிக்கொள்ளவேண்டும். சபையார் சக்கிரிஸ்தியில் உடுப்பு அணிந்துகொள்ளப் போகும் போதும் மற்றும் சடங்குகளிலும் மவுனங் காக்கும் படியாக கவனிப்பதோடு, பேச நேர்ந்தால் அனுசாரமான வார்த்தைகளைப் பிரயோகிக்காதபடி எச்சரிக்கையாயிருக்கக் கடவான். அந்தந்த வாரத்தில் நேர்ந்த தவறுதல்களைச் சபையை விசாரிக்கும் குருவானவரிடம் அறிவிக்கவேண்டியது. வாராந்தரக் கூட்டமுடிவில் சபையாரில் பூசைக்கு உதவிசெய்ய இன்னுந் தெரியாதவர்களுக்கு அதைக்கற்றுக்கொடுப்பான். சபைக்கூட்டங்களில் ஜெயம் சொல்வதும் அவனுடைய அலுவலே.

ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளில் அந்த வாரமுழுவதும் பூசைக்கும் தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்கும் உதவிசெய்ய வேண்டியவர்கள் இன்னாரென்று குறிப்பிடுவதுமன்றி, அவ்விதம் குறிக்கப்பட்டவர்களில் யாராவது வரத்தவறினால் வராதவனுக்குப் பதிலாக வேறொருவனை நியமிக்கவும் வேண்டும், குறிப்பிட்ட நாட்களில் உதவிசெய்யத் தவறின நபர்களைக் குறித்துவைக்கவும் வேண்டும். வாரந்தோறும் நடைபெறுங் கூட்டங்களில் ஆஜர் ஜாபிதா பார்த்து கூட்டங்களுக்கு வராதவர்கள் யாரென்றும், சபையாரில் தப்பிதஞ் செய்தவர்கள் யாரென்றும் சபை விசாரணைக் குருவானவரிடம் தெரிவிக்கவேண்டும்.

*N. B.* சபைத்தலைவன் இல்லாதவேளைகளில் அவனுக்குப்பதிலாக உபதலைவன் சகலமும் கவனித்துக் கொள்ளவேண்டியது.

## பொது ஒழுங்குகள்.

சபையார் கோவிலில் இருக்கும் பொழுது வணக்கமும் அடக்கமும் தங்களிடம்சிறந்துதோன்றும்படியான விதமாய் நடந்துகொள்வது சகலத்திலும் அதிமுக்கியமான விஷயமாகும். மெய்யான

அவசரமின்றி ஒருக்காலும் பேசவே கூடாது. சக்கிரிஸ்தியில் பேசிக்கொண்டிருக்கிற வழக்கம் சிலருக்கு உண்டு, இது முற்றிலும் தவறுதலான காரியம். திவ்விய நற்கருணைக்கு முன்பாகப் போய்வரவேண்டிய பொழுதெல்லாம் பத்தியுடன் முழங்காலினின்று எழுந்திருக்கவேண்டும். பூசை ஆராதனை, ஆசீர்வாத நேரங்களில் நடைபெறும் சடங்குகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். கோவிலில் அங்குமிங்கும் சுற்றிப் பார்க்கக்கூடாது. பூசைக்கு உதவி மந்திரத்தை மனப்பாடமாய்க் கற்றறிந்து, அதை நிறுத்தித் தெளிவாகவும் பக்தியோடும் சொல்லவேண்டும். சம்மனசுகளுக்கு மாத்திரம் உரித்தான அலுவலை நாம் செய்து வருகிறோம் என்றும், அதை செவ்வையாய்ச் செய்வதால் துஷ்ட மனிதரால் சர்வேசுரனுக்கு நேரிடும் அவமானங்களுக்குப்பரிகாரம் ஆகுமென்றும் சபையார் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும் உதாசின வார்த்தைகளை ஒருக்காலும் உபயோகிக்கலாகாது. மற்றவர்கள் அவ்வார்த்தைகளைச் சொல்லவும் விடக்கூடாது. விசேஷமாய் கோவில் கம்

பவுண்டுக்குள் அவ்விதமானவார்த்தைகள்யாராவது சொன்னால், அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்க அதிகார முள்ளவர்களிடம் அறிவிக்க வேண்டும். அடிக்கடி திவ்வியநற்கருணை உட்கொள்ளவேண்டும் குறைந்தபட்சம் வாரத்துக் கொருமுறை ஞாயிற் கிழமைகளிலும் திருச்சபையின் முக்கியமான திரு நாட்களிலும், தங்களுக்குப் பாதுகாவலரான அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் திருநாளிலும் திவ்விய நற்கருணை வாங்கக் கடவார்கள். தினந்தோறும் பின்வரும் ஜெபத்தைச் சொல்லிவருவது நல்லது.

## ஜெபம்.

---

அர்ச். அருளப்பரே, தேவாலயத்தில் மிகுந்த வணக்கமும் ஒழுக்கமுமாயிருந்தவரே, பரிசுத்தபரம நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் திவ்வியசேசு வையும் அவரது பரிசுத்தமாதாவையும் அர்ச். ஞான ப்பிரகாசியாரையும் அதி உருக்கமாய் நேசித்தவரே. நானும் உமது புண்ணிய மாதிரிகையைப்பின்பற்றி என்னுடைய நடத்தை உமக்கு ஒத்ததாகவும் உமக் குமகிமையாகவும் இருந்து, சர்வேசுரனுக் குரிய

மகிமையையும் வணக்கத்தையும் அவருக்குச் செலுத்தும்படியாக எனக்குவேண்டிய வரப்பிரசாதத்தை அடைந்து தந்தருளும். ஆமேன்.

1 பர. பிரி. திரி.

## விசேஷித்த ஒழுங்குகள்.

---

காலையில் திவ்விய பூசைக்கும், மாலையில் ஆசீர்வாதம் இருந்தால் அதற்கும் சபையார் எல்லாரும் ஆஜராகவேண்டியது. உதவிசெய்ய நியமிக்கப்பட்டவர்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட அலுவலைச் செய்வார்கள், மற்றவர்கள் தங்கள் இடத்தில் இருந்து பக்தியுடன் பூசை ஆசீர்வாதம் காணக்கடவார்கள்.

உதவிசெய்யக் குறிக்கப்பட்டவர்கள் பூசை ஆசீர்வாதம் துவக்குகிறதற்குப் பத்துநிமிஷம் முந்தியே சக்கிரிஸ்திக்கு வந்துசேரவேண்டியது. குருவானவர் பூசை ஆயத்தம் உடுப்பு முதலானவைகள் தரித்துக்கொள்ளும்போதும் அவைகளைக்கழற்றும் போதும் அவருக்கு உதவிசெய்யவேண்டும்.

மற்ற சபையார் பக்கத்துப்பீடங்களில் நடக்கக்கூடிய பூசைகளில் உதவிசெய்யவும், பெரிய பீடத்தில் உதவி செய்வதற்கு நியமிக்கப்பட்டவர்களில் யாராவது நேரத்தோடேவந்து சேராவிடில் அவர்களுக்குப் பதிலாக நிற்கவும் எப்போதும் தயாராயிருக்கவேண்டும்;— இது விஷயமாக சகலரும் சபைத்தலைவன் சொற்படி கேட்டு நடக்கவேண்டும். கீழ்ப்படியாமல் எதிர்வாதம் பேசுகிறவனைப்பற்றி சபை விசாரணைக் குருவானவானவரிடம் தெரிவிக்கவேண்டியது குறிப்பிட்ட நாளில் உதவிசெய்ய நியாயமான விக்கினம் இருந்தால் முன்னடியே சபைத்தலைவனுக்கு அறிவித்துக் கொள்ளவேண்டியது. நியமகம் ஆனபிறகு விக்கினம் நேர்ந்தாலும் அவ்விதமே செய்துகொள்ள வேண்டியது.

## வாராந்தரக் கூட்டம்.

புதன்கிழமை தோறும் காலை 9-மணிக்கு சபையாருக்கு சாதாரண கூட்டம் இருக்கும். அச்சமயங்களில் பின்வரும் முறை அநுஷ்டிக்கப்படும்

1. ஒருபர, ஒருபிரி, சொல்லி, அர்ச். மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரே எங்களுக்காகவேண்டிக் கொள்ளும் என்ற மன்றாட்டுகளைச் சொல்லவும்.

2. 53 மணி ஜெபமாலை சொல்லலாம்.

3. சபையாரின் ஆஜர் கணக்குப்பார்த்தல்

4. சபையாரில் சகலருக்கும் பூசைக்கு உதவி செய்யத் தெரிகிறதாவென்று தலைவன் பரிசோதித்துப் பார்த்தல்.

5. அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பருக்கு ஜெபம். (7-ம்பக்கம்.)

மாதாந்தரக் கூட்டத்தில் அதாவது மாதத்தின் முதல் புதன்கிழமையன்று மேற்சொன்ன முயற்சிகளுமன்றி, சபை விசாரணைக் குருவானவர் சபையாருக்குப் புத்திமதி சொல்வார்.

## பலன்கள்.

---

I. அர்ச், பெர்க்மான்ஸ் அருளப்பர் திருநாளன்றும், அதற்கு முந்தின 5 ஞாயிற்றுக்கிழமைகளிலும் (அவர் சேசு சபையில் 5 வருஷம் ஜீவித்ததை முன்னிட்டு) பரிபூரண பலன் அடையலாம்.

2. பத்தியோடு பூசைக்கு உதவிசெய்கிற ஒவ்வொரு தடவையும், பத்தியோடு முழந்தாட்படியிருக்கிற ஒவ்வொரு தடவையும், பத்தியோடு கோவிலில் இருக்கிற ஒவ்வொரு தடவையும் 100 நாட் பலன் அடையலாம்.

---

## பூசைக்கு
## உதவி செய்யவேண்டிய வகை.

சீஷன். கைகுவித்து தலை கவிழ்ந்து குருவானவருக்கு முந்தி பீடத்துக்கு நடந்துபோய் வலது பக்கத்தில் நின்று அவருடைய பிரேத்தா வென்னும் தொப்பியை வாங்கி வைக்கவேணும்.

பீடத்தில் திவ்விய நற்கருணையிருந்தால் குருவானவரோடு முழந்தாட்படியிட்டு இடது பக்கத்தில் குருவானவருக்குக் கொஞ்சம் பிறகே முழங்காலிலிருக்கவேண்டும். திவ்விய நற்கருணை ஸ்தாபித்திருந்தால் இரண்டு முழந்தாளும் படிந்து வணங்கவேண்டியது.

### பொது ஒழுங்குகள்.

1-வது. சீஷன் புஸ்தகமிருக்குமிடத்துக்கு எதிர்ப்பக்கமாய் எப்போதும் இருக்கவேணும்.

2-வது. குருவானவர் தமதுபேரில் சிலுவை வரைந்துகொள்ளும்போதெல்லாம் தானும் அப்படியே செய்யவேணும்.

3-வது. நடுவில் போகவேண்டிய சமயங்கள் தவிர மற்ற சமயத்தில் நடுவில் போய் முழந்தாட் படியிடக்கூடாது.

4-வது. நடந்துகொண்டு மறுமொழி சொல்லக்கூடாது.

5-வது. குறிக்கப்பட்ட நேரந்தவிர மற்ற நேரத்தில் தலைகுனியவேண்டாம்.

பூசை துவக்கப்போகிற தருணத்தில்
கொஞ்சம் மணி அடிக்கலாம்.

1. அத்தேயும் குயிலெத்திபிக்காத் யுவென் தூத்தெம்மேயாம்.

2. ஞுயியா து எஸ், தேயுஸ், போர்த்தித்தூதோ மேயா; குவாரே மெ ரேப்புலிஸ்தி, எத் குவாரே திறீஸ்திஸ் இன்சேதோ, தும் அப்ளீஜித் மே இனிமீக்குஸ்?

3. எத் இந்த்றேயீபோ அத் அல்த்தாரே தேயி, அத்தேயும் குயி லெத்திப்பிக்காத் யுவென் தூத்தெம் மேயாம்.

4. ஸ்பேரா இன் தேயோ, கோனியாம் அதுக் கொன் பித்தேபோர் இல்லி, சலுத்தாரே ஆல்த்துஸ் மேயி, எத்தேயுஸ் மேயுஸ்.

குருவானவர் அடுத்த வார்த்தைகளைச் சொல்லும் போது சீஷன் அவரோடு தலைகுனியவேண்டியது.

5. சீக்குத் எருத் இன் பிறின்சிப்பியோ, எத் நுங்க் எத் செம்ப்பெர், எத் இன் சேக்குலா சேக்குலோரும், ஆமென்.

6. அத்ரேயும் குயி லெத்திப்பிக்காத் யுவென் தூத்தெம் மேயாம்.

7. குயி பேசித் சேலும் எத்தெர்ராம்.

சீஷன் குருவானவர் பக்கமாய்த் தலைகுனிந்து அடுத்த செபஞ் சொல்லுகிறது.

8. மிசெரெயாத்துர் தூயி ஓம்னீப்பொத் தொன்ஸ், தேயுஸ் எத் திமிஸ்சிஸ் பெக்காத்திஸ் தூயிஸ், பேர் தூக்காத்தெ எத் வீத்தாம் எத்தேற்ணம்.

அடுத்த ஜெபஞ் சொல்லும்போது சீஷன் பீடத்துப்பக்கமாய் மிகவும் குனியவேணும்.

9. கொன்பீத்தெயோர் தேயோ ஓம்னிப் பொத்தேன்தி, பேயாத்தே மரீயே செம்பேர் வீர் ஜினி, பெயாத்தோ மிக்கயேலி அற்கான்ஜெலோ பெயாத்தோ, ஜோவான்னி பாப்திஸ்தே சாங்த்திஸ் அப்போஸ்தொலிஸ் பேத்ரோ எத் பவுலோ, ஓம்னி புஸ் சாங்த்திஸ்,

**குருவானவர் பக்கமாய்த் திரும்பி தலைகுனிந்து**

எத் தீபி பாத்தெர்,

**மறுபடி பீடத்துப் பக்கமாய் மிகவும் குனிந்து**

குயியாபெக்காவி நீமிஸ்கொஜித்தாசியோனே வேர்போ, எத் ஒப்பெரே.

**மூன்றுதரம் மார்பில் பிழை தட்டிக்கொண்டு**

மேயா குல்ப்பா, மேயா குல்ப்பா, மேயா மாக்ஸிமா குல்ப்பா.

இதேயோ பிரேக்கொர் பெயாத்தாம் மரீயாம் செம்பெர் வீர்ஜினெம், பெயாத்தும் மிக்கயேலெம் அற்கான்ஜெலும், பெயாத்தும் ஜொவான்னெம், பப்தீஸ்தாம், சாங்த்தோஸ் அப்போஸ்தொலோஸ்பேத்ரும் எத் பவுலும், ஓம்னெஸ் சாங்த்தோஸ்,

குருவானவர் பக்கமாய்த் திரும்பி தலைகுனிந்து எத் லெ தெ பாத்ரெ தர்,

மறுபடி பீடத்துப் பக்கமாய் மிகவும் குனிந்து ஒராரே புரோ மெ, அத் தோ மினும் தேயும்நோஸ் த்ரும்.

10. ஆமென்.

இந்த வார்த்தையைச் சொன்னபின் தலை நிமிர்ந்திருக்கிறது.

11. ஆமென்.

பின்வரும் செபங்களைக் கொஞ்சங் குனிந்து சொல்லுகிறது.

12. எத் பிளேப்ஸ் தூவா லெத்தாபித்துர் இன் தெ.

13. எத் சாலுத்தாரே தூவும் தா நோபிஸ்.

14. எத் கிளாமோர் மேயுஸ் அத் தெ வேனியாத்.

15. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

இந்த வார்த்தைகளைச் சொல்லி சீஷன் எழுந்துபோய் கடைசிப்படியின்மேல் முழங்காலில் இருக்கவேண்டியது.

16. கிரீயெ எலேயிசோன்
17. கிறீஸ்தே எலேயிசோன்
18. கிறீஸ்தே எலேயிசோன்
19. கிரியெ எலேயிசோன்
20. எத் கும் ஸ்பீரிது தூவோ.
21. ஆமென்.

நிருபமுடிவில் குருவானவர் சயிக்கினை காட்டும்போது.

22. தேயோ கிறுசியாஸ்.

என்று எழுந்து குருவானவருக்கு வலதுபக்சத்தில் போய் புஸ்தகத்தைச் சுவிசேஷப் பக்கத்துக்குக் கொண்டுபோகவேணும்.

23. எத் கும் ஸ்பீரித்து தூ வோ.

குருவானவர் நெற்றிலும், வாயிலும், மார்பிலும், பெருவிரலினுல் சிலுவை வரையும்பொழுது சீஷனும் அவ்விதமே சிலுவை வரைந்து சொல்லுவது.

24. குளோரியா தீபி தோமினெ.

குருவானவர் சுவிசேஷத்தை வாசிக்கத் துவக்கி (Jesus)—ஜேசுஸ் என்ற வார்த்தை சொல்லும் போது சீஷன் தலைகுனிந்து நடுவே வந்து, முழந்

தாளிட்டு, எதிர்ப்பக்கத்தில் போய் நிற்கவேணும்.
சுவிசேஷ முடிவில் சொல்ல வேண்டியதாவது:
25. லௌஸ் தீபி கிறீஸ்தெ.

இந்த வார்த்தைகளைச் சொல்லி முழங்காலி லிருக்கிறது.

26. எத் கும் ஸ்பீரித்து தூ வோ.

குருவானவர் பாத்திரம் மூடியிருந்த பட்டை எடுக்கும்போது, சீஷன் முழந்தாட்படி யிடாமல் குப்பிவைத்திருக்கும் இடத்துக்குப்போய் இரசக் குப்பியை வலது கையிலும், தண்ணீர்க்குட்பியை இடது கையிலும் எடுத்து, நிருபப் பக்கத்து மூலை யில் ஏறி, குருவானவர் கிட்டவருகையில் அவருக்கு வணக்கஞ்செய்து இரசக்குப்பியைக் கொடுக்க வே ணும். குருவானவர் பாத்திரத்தில் இரசம் ஊற் றும்போது தண்ணீர்க்குப்பியை வலதுகையில் பிடி த்து இரசக்குப்பியை இடது கையில் வாங்கி தண் ணீர்க்குப்பியைக் கொடுக்கவேணும். பிறகு குரு வானவருக்கு வணக்கஞ்செய்து, இரசக்குப்பியை முன்னிருந்த இடத்தில்வைக்கவேண்டியது. அதன் பின் தண்ணீர்க்குப்பியை வலதுகையில் பிடித்து,

தட்டும் துவாலேயும் இடதுகையில் பிடித்து பீடத்துக்குத் திரும்பிப்போய்க் குருவானவருக்கு வணக்கஞ்செய்து, அவர் விரல்களில்மெதுவாய் தண்ணீர் ஊற்றி துவாலேயைக்கொடுக்கவும். குருவானவருக்கு வணக்கஞ்செய்து எல்லாம் முன்னிருந்த இடத்தில் வைத்து, முழந்தாட்படியிடாமல் தன் இடத்தில் போய் முழங்காலிலிருக்கவேணும்.

(திவ்வியநற்கருணை ஸ்தாபகம் பண்ணியிருந்தால் கீழ்படியிலிருந்து கை கழுவ தண்ணீர் ஊற்றுகிறது.

சில இடங்களில் குருவானவர் "ஒரேமுஸ்" என்ற உடனே சீஷன் பாத்திரம் மூடுகிற பட்டை வாங்கி மடித்து பக்கத்தில் வைக்கப்போகிறான். அப்படிச்செய்கிறதற்கு விக்கினமில்லை.

குருவானவர் (Orate fratres— "ஓராத்தே பிராத்திரஸ்" என்று சொல்லி, பீடத்துப் பக்கமாய் முற்றும் திரும்பினபின்சொல்லவேண்டியதாவது:-

27. சுசீப்பியாத் தோமினுஸ் சாக்கிரிப்பீசியும் தெ மாணிபுஸ் தூயிஸ் அத் லௌதெம் பத் குளோரியாம் நோமினிஸ் தூயி, அத் உத்திலித்தாத்தெம்

குவோக்குவே நோஸ்த்ராம் தோசியுஸ்குவெ எக்கி ளேசியெ சுவெ சாங்த்தே.

28. ஆமென்.

29. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

30. அயேமுஸ் அத் தோமினும்.

31. தீக்னும் எத் ஜுஸ்தும் எஸ்த்

குருவானவர் சான்க்துஸ், சான்க்துஸ், சான்க்துஸ் என்று சொல்லும்போது மணியால் மூன்றுதட்டுதட்டினபின் கொஞ்சம் அடிக்கவேணும்

குருவானவர் பாத்திரத்தின்மேல் கைவிரிக்கும்போது கொஞ்சம் மணி அடிக்கவேண்டியது பிறகு மணியை எடுத்துக்கொண்டு. எழுந்து நடுவில் முழந்தாட்படியிட்டு குருவானவருக்குப் பின்னால் உயர்ந்தபடியில் முழங்காலிலிருந்து ஒவ்வொரு எழுந்தேற்றத்துக்கும் மிகவும் குனிந்து ஆயத்தத்தின் ஓரத்தைப் பிடித்துத் தூக்கி மணி கொஞ்சம் அடிக்கவும். அதன்பின் மூன்றுதட்டு தட்டி திரும்பவும் கொஞ்சம் அடிக்கவும். எழுந்தேற்றமானபின் எழுந்து கீழே இறங்கி நடுவில் நமஸ்காரம்பண்ணி தன் இடத்தில் போய் முழங்காலிலிருக்கவும்.

(Nobis quoque peccatoribus)— "நோபிஸ் குவோக்குவே பெக்காத்தோரிபுஸ்" என்று குருவானவர் சொல்லும்போது சீஷன் தன் மார்பில் ஒருதரம் பிழை தட்டிக்கொள்ளவேணும்

குருவானவர் ஒஸ்தியினால் பாத்திரத்தின் மேல் சிலுவை அடையாளம் போட்டபின், பாத்திரத்தோடு ஒஸ்தியைத் தூக்குகிறபோது மணி கொஞ்சம் அடிக்கிறது.

32. ஆமென்.

33. செத் லீபெரா நோஸ் அமாலோ.

34 ஆமென்.

35. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

(Agnusdei)— "ஆக்னுஸ் தேயி" என்று குருவானவர் சொல்லும்போது சீஷன் மூன்று தரம் மார்பில் தட்டிக்கொள்ளுகிறது. கருப்பு ஆயத்தத்தோடு பூசை நடக்கும்போது இப்படி செய்கிறதில்லை.

தோமினே நோன் சும் தீக்னுஸ்.

இந்த வார்த்தைகளை குருவானவர் சொல்லுகிறபோது ஒவ்வொரு விசைக்கும் ஒரு தட்டு தட்டுகிறது.

குருவானவர் திவ்விய நற்கருணை உட்கொண்டபின் பாத்திரத்தை மூடிய தட்டு எடுத்து முழந்தாட்படியிடும்போது, நன்மை வாங்குகிறதற்கு ஆள் உண்டென்று கண்டால் Confiteor) கோன்பீத்தேயோர் மந்திரஞ் சொல்லவேணும்.

குருவானவர் (Misereatur) "மிசெரேயாத்தூர் வெஸ்திரி" சொன்னபின்னும், (Indulgentiam) "இந்துல்ஜென்சியாம்" சொன்ன பின்னும் (Amen) ஆமென் என்று சொல்லுகிறது.

குருவானவர் நன்மை கொடுக்கிற போது வெளிச்சம் அவசரமாயிருந்தால் சீஷன் திரி எடுத்து கூடப்போகிறது. இல்லாவிட்டால் துணியால் மூடப்பட்ட பலகையை மாத்திரங் கொண்டுபோய் ஆயத்தக்காரர் மோவாய்க்கு கொஞ்சங் கீழே நீட்டுகிறது. பிறகு அந்தப்பலகையை பீடத்தின்மேல் வைத்து குப்பி எடுக்கிறது. ஆயத்தக்காரர் இல்லாதே போனால், மேற்சொன்ன தருணத்தில் குருவானவர் முழந்தாட்படியிடும்போது, பீடத்துக்கு வணக்கஞ்செய்யாமல் குப்பி இருக்கிற இடத்துக்கு நேரே போய் வலதுகையில் இரசமும் இடது

கையில் தண்ணீரும் எடுத்து பீடத்துக்குவந்து நமஸ்காரஞ்செய்து, குருவானவர் நீட்டுகிறபோது இரசம் ஊற்றி கொஞ்சம் பின்னாலே போக வேணும். அதன்பின் குருவானவர் திரும்ப வரும் போது அவர் விரல்களில் இரசமுந் தண்ணீரும் வார்த்து, அவருக்கு வணக்கம் பண்ணி குப்பிகளை இருந்த இடத்தில் வைக்கிறது. அதன்பின் புஸ்த கத்தை நிருபப்பக்கத்தில் கொண்டுவருகிறது. (அங்கே கொஞ்சங் காத்துக்கொண்டு பாத்திரம் மூடுகிற பட்டைக் குருவானவருக்கு நீட்டலாம்) அப்புறம் நடுவே போகும்போது முழந்தாட் படி யிட்டு சுவிசேஷப்பக்கத்தில் முழங்காலிலிருக்கவும்

36. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

37. ஆமென்.

38. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

39. தேயோ கிருசியாஸ்.

குருவானவர் (Requiescant in pace)—"ரெக்குயியெஸ்காந்த் இன் பாசே" என்று சொன்னால், சீஷன் (Amen) ஆமேன், என்று சொல்லுகிறது.

(Deo gratias)-தேயோ கிறசியாஸ் என்று சொன்னதின்பின் [குருவானவர் புஸதகம் திறந்து வைத்திருந்தால், சீஷன் அதை சுவிசேஷப் பக்கத்துக்கு கொண்டுபோகவேணும்.] (நடுவில் நமஸ்காரம்.) குருவானவர் ஆசீர்வாதங் கொடுக்கும்போது சீஷன் முழங்காலிலிருந்து மிகவுங் குனிந்து (Amen) ஆமேன் என்று சொல்லுகிறது. குருவானவர் புஸ்தகத்தைமூடியிருந்தால் அவர் ஆசீர்வாதங் கொடுக்கும்போது சீஷன் மிகவுங்குனிந்து தனது பேரில் சிலுவை வரைந்துகொள்ளவேணும். அதின் பின்எழுந்திருக்கிறது.

40. எத் கும் ஸ்பீரித்து தூவோ.

ஓனிசியும் என்ற வார்த்தைகளைக் குருவானவர் சொல்லும்போது சீஷன் நெற்றியிலும், வாயிலும், மார்பிலும்பெருவிரலினுல் சிலுவை வரைந்துகொண்டுசொல்லுகிறதாவது:

41. குளோரியா தீபி தோமினெ.

இவ்வார்த்தைகளைச் சொல்லி நடுவில் நமஸ்காரம்பண்ணி நிருபப் பக்கம்போய் பிரேத்தா எடுத்து, பிற்பாடு குருவானவரோடு தானும் முழந்தாட்படியிட்டு சுவிசேஷ முடிவில் சொல்லுகிறதாவது

42. தேயோ கிருசியாஸ்.

பூசை முடிந்தபின் குருவானவருக்கு பிரோத்தா கொடுத்து, அவரோடு முழந்தாட்படியிட்டு, துவக்கத்தில் வந்தவிதமாய்த் திரும்பி சக்கிறீஸ்திக்குப்போகிறது.

## இரண்டுபேர் உதவி செய்யும்போது அநுசரிக்கவேண்டிய ஒழுங்கு.

---

முதல் சீஷன் நிருபப் பக்கத்திலும், இரண்டாம் சீஷன் சுவிசேஷப் பக்கத்திலும், இருக்கவேணும். ஒருபோதும் இடமாற்றக்கூடாது.

ஒரே சத்தமாய்ச் சேர்ந்து பதில் சொல்லவேண்டியது.

நிருபம் முடிவில் முதல்சீஷன் புஸ்தகத்தைச் சுவிசேஷப் பக்கத்தில் கொண்டுபோய் வைத்துத் தன் இடத்துக்கு திரும்பி வரவேணும் குருவானவர் அப்பம் ஒப்புக்கொடுத்தபின் முதல் சீஷன் இரசமுந் தண்ணீருங்கொடுத்துக் கீழே வரும்போது இரண்டாம் சீஷன் அவனோடு சேர்ந்து கொள்ளவேணும். முதல் சீஷன் கைத்துவாலையும்

இரண்டாம் சீஷன் முந்தினவனுடைய இடது பக்கத்திலிருந்து தன் வலதுகையில் தண்ணீர் குப்பியும், இடதுகையில் தட்டும் பிடித்து, இரண்டு பேருமாக பீடத்துக்குப் போகிறது. பிற்பாடு கீழே இறங்கி நடுவில் போய் நமஸ்காரஞ் செய்து தங்கள் தங்கள் இடத்துக்குப் போகவேணும்.

முதல் சீஷன்தான் மணி அடிக்கிறது.

எழுந்தேற்றத்துக்கு முன்னதாக இரண்டு பேரும் நடுவில் வந்து ஒருமிக்க முழந்தாட்படியிட்டு மேற்படியில் ஏறி குருவானவருக்குப்பின்னு லிருந்து ஆயத்தத்தின் விளிம்பைப் பிடித்துத் தூக்குகிறது.

குருவானவர் திவ்விய இரத்தம் உட்கொண்ட பின் முதல் சீஷன் மாத்திரம் இரசமும் தண்ணீருங் கொடுக்கவேண்டியது.

பிற்பாடு முதல் சீஷன் பாத்திரம் மூடுகிற பட்டை எடுக்கப்போகிறபோது இரண்டாம் சீஷன் பீடத்துக்குப்போய் புஸ்தகத்தை எடுக்

கிறது. இருவரும் நடுவில் வந்து ஒருமிக்க நமஸ்காரஞ்செய்து, இரண்டாம் சீஷன் முதல் சீஷனுக்கு முன் ஏறி இருவரும் பீடத்துக்குப் போகவேணும் அங்கே நின்றுகொண்டு முதல் சீஷன் பாத்திரம் மூடுகிறபட்டை குருவானவருக்கு கொடுத்த உடனே, இருவரும் நடுவில் வந்து நமஸ்காரம் பண்ணி தங்கள் தங்கள் இடத்துக்குப்போகவேணும்.

கடைசி சுவிசேஷம் வாசிக்கப் புஸ்தகம் வேண்டியதானல் முதல்சீஷன்தான் அதைக் கொண்டுபோகவேணும்.

## பூசைமுடிந்தபின் சொல்லவேண்டிய ஜெபங்கள்.

1. சான்க்தா மரீயா, மாத்தெர் தேயி, ஓரா ப்ரோ நோபிஸ் பெக்காத்தோரிபுஸ் நுங்க் எத் இன் ஓரா மோர்த்திஸ் நோஸ்திரே ஆமென்.

2. உத் தீக்னி எப்பிசியமுர் ப்ரோமிசியோனிபுஸ் கிறீஸ்தி.

3. ஆமென்.

4. ஆமென்.

5. மிசெரெரெ நோபிஸ்.

(மூன்று தடவை)

S. P. Press, Tuticorin.

6A
4-42